விலை ரூபா: 10.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்: நான்கு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2038 தை 16 செவ்வாய்க்கிழமை (30.01.2007) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 42

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது
ராம்கோ சீமெந்து

# இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்த அமைதிப் பேச்சுக்களில் ஈடுபடுங்கள்

## உதவி வழங்கும் நாடுகள் கோரிக்கை

(கொழும்பு)

இலங்கை இனப்பிரச்சினைக்கு இராணுவ ரீதியாக தீர்வினை காணமுடியாது. அரசும் விடுதலைப்புலிகளும் மோதல்களைத் தவிர்த்து நிரந்தர சமாதானத் தீர்வினைக்காண அமைதிப்பேச்சுக்களில் ஈடுபடவேண்டும் என இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் வேண்டுகோள் விடுத்துள்ளன.

காலியில் நேற்று ஆரம்பமான இலங்கை அபிவிருத்திச் சபைக் கூட்டத்தில் கலந்து கொண்ட உதவி வழங்கும் நாடுகள் இக் கோரிக்கை விடுத்துள்ளன. (04 ஆம் பக்கம் பார்க்க)



ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை அமெரிக்கத் தூதுவர் ரொபேர்ட் ஓ.பிளாக், நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர், ஜேர்மன் தூதுவர் யுர்ஜென் வீர்த் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தைச் சேர்ந்த வில்சன் ஆகியோர் நேற்று சந்தித்து இலங்கை நிலைவரம் குறித்து கேட்டறிந்தனர். அச் சந்திப்பினை படத்தில் காணலாம்.

## நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவது அவசியம் என்பதை அரசு ஏற்றுக் கொள்கிறது

### ஜனாதிபதி மகிந்த காலியில் உரை

(கொழும்பு)

வடக்கு,கிழக்கு மற்றும் ஏனைய பிரதேசங்களை அபிவிருத்தி செய்தல், நிலையான சமாதானமொன்றை ஏற்படுத்தல் என்பன அத்தியாவசியமான தொன்று என்பதை அரசாங்கம் ஏற்றுக் கொள்வதாக ஜனாதிபதி போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

பல்வேறு இன மதங்களைக் கொண்ட சமூகமொன்றில் ஏற்படக்கூடிய சச்சரவுகளுக்கு தீர்வுகாணும்போது சமாதானம், அபிவிருத்தி போன்ற இவ் விடயங்கள் முக்கியத்தும் பெறுகின்றன.

கத்தில் ஏற்படும் மோதல் நிலைமைகளை பயங்கரவாதத்திலிருந்து வேறுபடுத்திக் காண்பதற்கு எமது அபிவிருத்திப் பங்காளர்கள் திறமையானவர்கள் என்பது குறித்து எனக்குச் சந்தேகமில்லை.

கிராம மட்டத்திலே ஆரம்பிக்கப்படுகின்ற

## திருகோணமலையில் இளைஞன் சுட்டுக்கொலை

(திருகோணமலை)

திருகோணமலை விபுலானந்தக் கல்லூரிக்கு அண்மையில் நேற்று மாலை 5.30 மணியளவில் இனந்தெரியாத நபர்களினால் இளைஞர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

சுட்டுக்கொல்லப்பட்டவர் சிறீகரன் சசிந்தன் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

(கொழும்பு)

வடக்கு,கிழக்கு மற்றும் ஏனைய பிரதேசங்களை அபிவிருத்தி செய்தல், நிலையான சமாதானமொன்றை ஏற்படுத்தல் என்பன அத்தியாவசியமான தொன்று என்பதை அரசாங்கம் ஏற்றுக் கொள்வதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

காலியில் நேற்று இலங்கை அபிவிருத் தி மாநாட்டை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

பல்வேறு இன மதங்களைக் கொண்ட சமூகமொன்றில் ஏற்படக்கூடிய சச்சரவுகளுக்கு தீர்வுகாணும்போது சமாதானம், அபிவிருத்தி போன்ற இவ் விடயங்கள் முக்கியத்தும் பெறுகின்றன.

ஆதலால் கலாசார ரீதியிலும் வருமான ரீதியாகவும் பிரதேச அபிவிருத்தி ரீதியாகவும் முரண்பாடுகள் காணப்படும் சிக்கலான சமூகத்தில் ஏற்படும் மோதல் நிலைமைகளை பயங்கரவாதத்திலிருந்து வேறுபடுத்திக் காண்பதற்கு எமது அபிவிருத்திப் பங்காளர்கள் திறமையானவர்கள் என்பது குறித்து எனக்குச் சந்தேகமில்லை.

கிராம மட்டத்திலே ஆரம்பிக்கப்படுகின்ற எமது 'கமநெகும' அபிவிருத்தி வேலைத் திட்டம் சமூகத்தை வலுவூட்டுவதற்கு உறுதியான அத்திபாரம் இடும் (04 ஆம் பக்கம் பார்க்க)

திருகோணமலை விபுலானந்தக கல்லூரிக்கு அண்மையில் நேற்று மாலை 5.30 மணியளவில் இனந்தெரியாத நபர்களினால் இளைஞர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

சுட்டுக்கொல்லப்பட்டவர் சிறீகரன் சசிந்தன் என அடையாளம் காணப்பட்டுள்ளார். இவரது சடலம் மரண விசாரணையின் பொருட்டு வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ச-3)

# தெல்லிப்பழை புனர்வாழ்வு நிலையத்தை மீளவும் இயங்கவைக்க நடவடிக்கை!

(யாழ்ப்பாணம்)

யுத்தநிறுத்த உடன்பாட்டிற்கு முன்னர் இயங்கிய தெல்லிப்பழை புனர்வாழ்வு முகாமை மீள இயக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக தெரியவருகின்றது.

குடாநாட்டில் ஆயுததாரிகளின் கொலை அச்சுறுத்தல்களால் பெண்ணொருவரும் சிறுமியொருவரும் அடங்கலாக இதுவரை 42 பேர் நீதிமன்ற காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.இந்நிலையில் நேற்று கொக்குவில் மேற்கைச் சேர்ந்த ஒரு இளைஞனும் யாழ். பொலிஸ் நிலை (04 ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கை சமாதானப் பாதையில் செல்வதைத் தவிர வேறு வழியில்லை

## உலகவங்கி வலியுறுத்து

இலங்கை அரசுக்கு சமாதான பாதையில் பயணிப்பதை தவிர வேறு வழியில்லை என உலக வங்கி வலியுறுத்தியுள்ளது.

நேற்று ஏ.எப்.பி செய்தி சேவைக்கு கருத்துரைத்த உலக வங்கியின் தென்னாசிய பிராந்தியத்தின் துணை தலைமை அதிகாரி பிறவுல் பட்டேல் சமாதானப் பாதையில் பயணிப்பது கடினமாக இருந்தாலும் நாட்டை முன்னேற்றகரமான அபிவிருத்திப் பாதையில் இட்டுச் செல்வதற்கு சமாதானத்தின் மீதான பற்று உறுதியும் அதற்கான புரிதலும் இன்றியமையாதது என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை ஏற்கனவே இடப்பெயர்வுக்கு உள்ளாகிய மூன்று இலட்சம் மக்களுடன் கடந்த ஆண்டு மேலும் இரண்டு இலட்சம் மக்கள் குடிபெயர்க்கப்பட்டிருப்பதாகவும் இந்த ஐந்து இலட்சம் மக்களும் இருப்பிடம்,கல்வி,சுகாதாரம் ,ஆகியவற்றை இழந்து அல்லல்படுவதாகவும் அவர் கவலை வெளியிட்டுள்ளார்.எனவே அரசுக்கு சமாதான வழியில் பயணிப்பதைவிட வேறு வழிகிடையாது என தெரிவித்துள்ளார். (ச)

# காங்கேசன்துறை துறைமுகத்தில் பொருட்களை இறக்குவதில் தாமதம்

## வரிசையில் காத்துகிடக்கும் கப்பல்கள்

(யாழ்ப்பாணம்)

கப்பல்கள் மூலம் எடுத்துவரப்பட்ட பொருட்களை இறக்குவதில் காலதாமதம் ஏற்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. கொழும்பு மற்றும் இந்தியாவிலிருந்து எடுத்துவரப்பட்ட பொருட்களுடன் மூன்று கப்பல்கள் காங்கேசன்துறையில் நிறுத்தப்பட்டுள்ளன.

இவற்றிலிருந்து ஒரே நேரத்தில் பொருட்களை இறக்கமுடியாத நிலை காணப்படுவதாலேயே தாமதம் ஏற்பட்டுள்ளதாக கூறப்பட்டது. ஒவ்வொரு கப்பலில் இருந்தும் தனித் தனியாகவே பொருட்கள் இறக்கப்பட்டு வருவதால் பொருட்களுடன் வந்த மற்றைய கப்பல்கள் வரிசையில் (04 ஆம் பக்கம் பார்க்க)

# பயணிகள் கப்பல் சேவை பெப்ரவரி 3-ல் ஆரம்பம் !

(கொழும்பு)

திருகோணமலைக்கும் யாழ்ப்பாணத்திற்குமிடையிலான பயணிகள் கப்பல் சேவை எதிர்வரும் 3 ஆம் திகதி முதல் நடைபெறவுள்ளதாக அரச தரப்புத் தகவல்கள் தெரிவித்தன.

'திரி றோசன்' என்ற பயணிகள் கப்பல் திருகோணமலையிலிருந்து தனது சேவையை ஆரம்பிக்கவுள்ளது. திருகோணமலையில் தங்கியிருக்கும் பயணிகளை ஏற்றிக் கொண்டு காங்கேசன்துறைக்கு வரும் அக் கப்பல் மறுநாள் காங்கேசன்துறையிலிருந்து புறப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.தெல்லிப்பழையில் தங்கியிருக்கும் வெளி மாவட்ட பயணிகளே முதலில் அனுப்பிவைக்கப்படுவார்கள் என கூறப்பட்டது. (ச-5)

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

# விடுதலைப்புலிகளின் பொறுமையை சர்வதேசம் கண்டுகொள்ளவில்லை

## சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு



(கிளிநொச்சி)

எந்தவிதமான உணர்வையும் வெளிப் படையாகத் தெரிவிக்காத வெறும் அசை வற்ற போக்குடன் அனைத்துலக சமூகம் இருப்பது, சிறிலங்கா அரசு தனது வன் முறை அரசியலையும் இராணுவத் தீர்வை யும் தொடர்ந்து முன்னெடுக்க உந்துசக்தி யாக இருக்கின்றது என்று தமிழீழ விடுத லைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப் பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்துள் ளார்.

இது தொடர்பில் தமிழ்நெட் இணையத் தளத்திற்கு அவர் தெரிவித்துள்ளதாவது;

இலங்கை இனப்பிரச்சினைக்கு இரா ணுவத்தீர்வு சரியானது அல்ல என்பதை வெறுமனே கருத்தாக வெளிப்படுத்தி வரும் அனைத்துலக சமூகம் கொழும்பு அரசு அந்த இராணுவத் தீர்வு என்ற நிலைப்பாட் டிலிருந்து வெளியே வருவதற்கான எந்த அழுத்தத்தையும் கொடுக்காது அமைதி காக்கிறது. விடுதலைப்புலிகள் எவ்வளவு பொறுமையை வெளிப்படுத்திய போதிலும் அனைத்துலக சமூகம் அதனை கண்டு கொள்ளவில்லை.

எக்காரணம் கொண்டும் நாம் இராணுவ செயற்பாடுகளை முன்னெடுத்துக் கொண்டு பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ள மாட்டோம்.

பேச்சுவார்த்தை மூலமான தீர்வுக்கான முன்னெடுப்புக்களுக்கு தகுந்த அமைதியான சூழ்நிலை அவசியம். அத்தகைய அமைதி யான சூழலின் அவசியத்தை விடுதலைப் புலிகள் அமைப்பு ஏற்கனவே தெளிவாக முன்வைத்துள்ளது.

இந்த சூழ்நிலைக்கான அடிப்படை விதிகள்,பெப்ரவரி 2002இல் கைச்சாத்திடப் பட்ட போர் நிறுத்த ஒப்பந்தத்தில் தெளிவாக ஒத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

போர் நிறுத்த ஒப்பந்தத்தில் ஒத்துக் கொள்ளப்பட்ட விடயங்களை அரசு நடை முறைப்படுத்துவதற்கு ஏதுவான ஓர் சூழலை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக கடந்த சில வருடங்களாக விடுதலைப் புலிகளின் தலை மை பொறுமையையும் சகிப்புத் தன்மை யையும் வெளிப்படுத்தி வருகிறது.

விடுதலைப்புலிகள் விட்டுக் கொடுப் புடனும் திறந்த மனதுடனும் இருக்க வேண்டு மென்று சர்வதேச சமூகம் கோரியதை நாம் தொடர்ந்து மதித்து நடக்கிறோம்.

இரு ஜெனிவா பேச்சுவார்த்தைகளில் இந்த விட்டுக்கொடுப்புத் தன்மையைத் நாம் அனைத்துலக சமூகத்திற்கு நிரூபித்துள் ளோம்.

ஜெனிவா -01 மற்றும் ஜெனிவா -02 பேச்சுவார்த்தைகளுக்கு இடைப்பட்ட 8மாத காலத்தில் அரசு திட்டமிட்ட இரகசிய பனிப் போரை நிரந்தர வெளிவாரியான வலிந்த போராக மாற்றியதையே அனைவரும் பார்க்கக் கூடியதாக இருந்தது.

அரசு துணைப்படைகளை தனது இரா ணுவத்தின் இணைந்து செயற்பட அனுமதி த்ததை ஆதாரபூர்வமாக நாம் நிரூபித்தோம். விடுதலைப்புலிகள் மீது துணைப் படை யினர் தங்களது அரசியல் செயலகங்கள் என்று சொல்லப்படுகிற நிலைகளிலிருந்து தாக்குதல் தொடுத்ததை அவர்களே ஒத்துக் கொண்டும் இருக்கின்றனர்.

பொதுமக்கள் மீதான கொலைகள் ,படு கொலைகள், கட்டாய கடத்தல்கள் போன் வற்றை இராணுவமும் அதனுடன் சேர்ந்தி யங்கும் துணைப்படைகளும் மிகப் பரவ லாக இணைந்து முன்னெடுத்து வருகின்றன மனித உரிமை அமைப்புக்கள் திட்டமிட்ட வகையில் தொடர்ச்சியாக மிரட்டப்பட்டும் தடுக் கப்பட்டும் எச்சரிக்கப்பட்டும் அவர்களது உறுப்பினர்கள் கொலை செய்யப்படு வதுடன் கடத்தப்பட்டும் வருகின்றனர்.

இந்தியாவால் உருவாக்கப்பட்டு 18 வருடங்கள் நிலைத்திருந்த வடக்கு - கிழக்கு இணைப்பு என்ற அனைத்துலக ஒப்பந்தத் தைக் கூட அரசியல் சாயம் பூசப்பட்ட உச்ச நீதிமன்ற அதிகாரத்தை பயன்படுத்தி மிகவும் புத்திசாலித்தனமாக நிராகரித்து கிழித்தெறிந்திருக்கிறது.

இத்தகைய சூழ்நிலையில் அனைத் துலக சமூகத்தின் ஆகக்குறைந்த கரிசனை வார்த்தைகள் மிகச் சிறிதளவு ஆறுதலை யே தமிழ் மக்களுக்குத் தருகிறது. தமிழ் மக் களின் பாரம்பரிய பிரதேசங்களை சிறி லங்கா இராணுவம் ஆக்கிரமித்து வரும் நிலையில் கிழக்கிலங்கை தமிழ் மக்கள் மிக மோசமான துன்பங்களை அனுபவித்து வருகின்றனர்.

இதனால் அனைத்துலகத்தின் நிலைப் பாடு தொடர்பாக தமிழ் மக்களின் சந்தேகம் அதிகரித்துச் செல்கிறது. இலங்கைப் பிரச் சனை தொடர்பில் இரு தரப்பின் மீதும் அனைத்துலகம் கொண்டுள்ள அணுகு முறை தொடர்பாக கடும் சந்தேகமும் தமிழ் மக்களிடம் காணப்படுகிறது.

தமிழ் மக்கள் தங்களது பிரதிநிதிகளாக நம்பி ஏற்றுக்கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்பில் அனைத்துலக சமூகம் நியாயத்தன்மையுடன் நடந்து கொள்ள வில்லை என்று தான் தமிழ் மக்கள் கருது கிறார்கள். நீண்ட வரலாறு கொண்ட ஈழத் தமிழர்களின் அரசியல் அபிலாசைகளை யும்சுயநிர்ணய உரிமையுடன் கூடிய கெள ரவமான வாழ்வியலையும் அனைத்துலகம் நியாயமான முறையில் கண்டுகொள்ள வில்லை என்று உணர்கிறார்கள் என்றார் அவர். (எ-1)

# இந்தியாவை சங்கடப்படுத்துவதற்காக இலங்கைக்கு பாகிஸ்தான் இராணுவ உதவி

## சிவாஜிலிங்கம் எம்.பி.தெரிவிப்பு

(விழுப்புரம்)

இந்தியாவை சங்கடப்படுத்தும் நோக்கத் தில் இலங்கைக்கு பாகிஸ்தான் இராணுவ உதவிகளை அளிப்பதாக யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜி லிங்கம் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழர்களுக்காக தமிழகத் தில் தமிழ் உணர்வாளர்கள் சேகரித்த உண வுப் பொருட்களை பழ நெடுமாறனிடம் வழங் கும் விழாவில் பங்கேற்ற சிவாஜிலிங்கம் நிருபர்களிடம் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஐந்தாண்டுகளாக சமாதானப் பேச்சுவார்த் தைகளை இலங்கை அரசு நடத்தியபோது இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு கௌரவ மான தீர்வு ஏற்படும் என நம்பினோம்.

ஆனால் தற்போது தமிழீழத்தின் மீது இராணுவ நடவடிக்கை திணிக்கப்பட்டுள்ளது. இலங்கை அரசின் இந்தப் போக்கை சர்வ தேச சமூகத்தினர் புரிந்து கொள்ளத் தொடங் கியுள்ளனர்.

தமிழீழப் பகுதியில் தினமும் வெடிகுண் டுத் தாக்குதல்கள் இடம் பெறுகின்றன. இந் தியாவைச் சங்கடப்படுத்தும் நோக்கத்துடன் அமெரிக் காவின் இராணுவத் தளபா டங்களை பாகிஸ்தான் இலங்கைக்கு வழங்கு கிறது.

பாகிஸ்தான் வழங்கிய இராணுவப் பீரங்கிகள் , இராணுவ சாதனங்களை இலங்கை இராணுவம் இலங்கைத் தமிழர்களுக்கு எதி ராக பயன்படுத்துகிறது.

இலங்கைப் பிரச்சினை யில் இதுவரை மறைமுக மாகத் தலையிட்ட அமெரிக் கா இப் போது நேரடியாகத் தலையிடவும் திட்டமிட்டுள் ளது.

எத்தனை எதிர்ப்பு வந்தா லும்தமிழீழ விடுதலை கிடைக் கும்வரை போராட்டத்தை நசுக்கும் முயற்சிகளை எதிர் கொள்வோம் என சிவாஜிலி ங்கம் தெரிவித்தார். (ச-5)






# தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் பெப்.2 முதல் நேர்முக விசாரணை

(யாழ்ப்பாணம்)

உயர்பாதுகாப்பு வலயத்தில் மீள்குடி யேற்றம் தொடர்பான நேர்முக விசாரணை கள் தெல்லிப்பழை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக தெல்லிப் பழை உதவிப் பிரதேச செயலர் சு.முரளிதரன் அறிவித்துள்ளார்.

மீளக் குடியேறவிரும்புபவர்கள் ஆட்பதிவு அடையாள அட்டை ,காணி உரிமையை நிரூபிக்கும் ஆவணம் ,குடும்பப் பங்கீட்டு அட்டை அல்லது மின் கட்டணம் செலுத்திய மைக்கான பற்றுச் சீட்டு ,அல்லது சோலை வரி செலுத்தியதற்கான பற்றுச்சீட்டு மற்றும் வேறு ஆவணங்கள் கொண்டுவரவேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பின்வரும் திகதிகளில் கிராமசேவையா ளர் பிரிவுகள் ரீதியாக விசாரணைகள் நடை பெறவுள்ளது.

எதிர்வரும் 2 ஆம் திகதி ஜே/219,ஜே/ 227, 5ஆம் திகதி ஜே/222, ஜே/221, 6ஆம் திகதி ஜே/212, ஜே/215, 8ஆம் திகதி ஜே/224, ஜே-229, 9ஆம் திகதி ஜே/ 220, ஜே/216, 12 ஆம் திகதி ஜே/217, ஜே/218, 13ஆம் திகதி ஜே/239, ஜே/244. (ச)

# கல்வி அமைச்சின் தமிழ் மொழி மூலப் பணிகள் அமைச்சின் மேலதிக செயலரிடம் ஒப்படைப்பு

தமிழ்மொழி மூலமான வேலைகளை கல்வி அமைச்சில் கையாளும் முழுப் பொறுப்பையும் கல்வி அமைச்சரின் மேல திக செயலாளர் உடுவை தில்லைநடராஜா விடம் ஒப்படைத்துள்ளதாக கல்வி உயர் கல்வி அமைச்சர் சுசில் பிறேமஜெயந்த அறிவித்துள்ளார்.

தமிழ் மொழிமூல அதிபர்கள், ஆசிரியர் கள் கல்வி உயர் கல்வி அமைச்சில் தொடர்பு கொண்டு தமது தொழில் ரீதியான பிரச்சி னைகளைத் தீர்க்க முடியாதிருப்பதாக தெரி வித்து இதற்கான பரிகார நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் விடுத்த வேண்டுகோளை யடுத்து இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர்கள் மேலதிக செயலாளருடன் தொடர்பு கொண்டால் அவர் சம்பந்தப்பட்ட அமைச்சின் பிரிவுகளுடன் தொடர்பு கொண்டு அவற்றைத்தீர்த்து வைப்பார் என கல்வி அமைச்சர் சுசில் பிறேமஜெயந்த தெரிவித் ததாக சங்கத்தின் பொதுச் செயலாளர் த.மகாசிவம் தெரிவித்தார். (ச)

# புதிய அலுவலகம் திறப்பு

வாழ்க்கைப் பெறுமானங்களுக்கான இயக்கத்தின் வடபிராந்தியத்திற்கான தலை மை அலுவலகம் எதிர்வரும் முதலாம் திகதி முற்பகல் 11.30 மணிக்கு கல்வயல் பெருங் குளப் பிள்ளையார் வீதியில் திறந்து வைக் கப்படவுள்ளது.

மேற்படி தொண்டு நிறுவனத்தின் தலை வர் வண.றொகான் ராஜன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தி னராகக் கரித்தாஸ்-கியூடெக் நிறுவனத்தின் இயக்குநர் வண.பிதா.கி.ஜோ.ஜெயக்குமார் அடிகளார் கலந்து கொள்கிறார். (எ)


*அறிவித்தல்*

24,28 ஆம் திகதிகளில் கடைசிப் பக்கத்தில் பிரசுரிக் கப்பட்ட கிருஷ்ணா அடகுகடை விளம்பரத்தில் 07.02.2007 விற்கப்படும் என்பதை 28.02.2007 என திருத்தி வாசிக்கவும். (சி-அ-62)

குற்றம் செய்யும் ஒவ்வொருவரும் தன் இலட்சியத்தை அடையாது நெறி தவறியவனே.

–ஔரேலியன் மார்க்கஸ்

வலம்புரி

## தாவிப் போனவர்களே! போருக்கா 'ஓ'போடுவீர்?

ஐக்கிய தேசியக் கட்சியின் 15 நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆளும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியில் இணைந்துள்ளனர்.

பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ்,கரு ஜெயசூரியா, மிலிந்த மொறகொட, ராஜித சேனாரட்ண போன்ற ஐக்கிய தேசியக்கட்சியின் பெருந்தலைகள் ஆளுந் தரப்பிற்கு தாவிப் போனமை ஐக்கியதேசியக் கட்சியின் பலத்திற்கு ஆபத்தானதென்பதை ஏற்றுத்தானாக வேண்டும்.

இவ்விதம் ஐக்கியதேசியக்கட்சியின் பெருந்தலைகள் ஆளுந்தரப்பிற்குத் தாவுவதற்கான காரணம் ரணில் விக்கிரமசிங்காவின் ஆளுமைக் குறைவா? அல்லது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தனியாளுமைத்திறனா? என்பதை ஆய்வாளர்களின் பக்கம் விட்டு விடலாம்.

அதேநேரம் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ், மிலிந்த மொறகொட, கரு ஜெயசூரியா போன்றவர்களுக்கு ரணில் விக்கிரமசிங்கா முக்கியமான இடத்தை வழங்கியிருந்தார். ரணிலின் தலைமையில் குறிப்பிட்டவர்களுக்கு அதிருப்தி இருந்தமை தெரிந்த விடயமாயினும், தமது கட்சியை தூக்கி எறிந்து விட்டு ஜனாதிபதி மஹிந்தவின் தலைமையிலான ஆளும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியில் இணைந்து கொள்ளும் அளவிற்கு என்னதான் நடந்த [illegible]தென்ற கேள்வி தென்னிலங்கை அரசியல் புலத்தில் சுனாமி வேகத்தில் எழுந்துள்ளது.

அதிலும் அரசியலில் நேர்மையானவர் என்று கூறக்கூடிய பேராசிரியர் பீரிஸும் ஆளும் கட்சியில் இணைந்து கொண்டமை இலங்கை அரசியல்வாதிகள் எவருமே நேர்மைத் தன்மையற்றவர்கள், பதவி ஆசைகொண்டவர்கள் என்பதை நிரூபிப்பதாக அமைந்து விட்டது.

ஏற்கனவே சந்திரிகா குமாரதுங்காவின் வரவேற்புடன் சிறிலங்கா சுதந்திரக்கட்சியிலும் பாராளுமன்றத்திலும் காலடி வைத்த பேராசிரியர் பீரிஸ், சந்திரிகா குமாரதுங்காவை தூக்கி எறிந்து விட்டு ரணில்விக்கிரமசிங்காவின் கட்சிக்கோட்டைக்குள் புகுந்து கொண்டார்.

இப்போது அடைக்கலம் கொடுத்த ரணில் விக்கிரமசிங்காவை திரும்பியும் பாராமல் ஜனாதிபதி மஹிந்தவின் பக்கம் ஓடிப்போயுள்ளார். இவற்றையெல்லாம் பார்க்கும் போது குடாநாட்டுபத்திரிகைகள் ஒருசிலவற்றில் இடம்பெறும் 'ஆள்ஈர்ப்பும்' 'நம்பிக்கைத் துரோகமும்' இலங்கை அரசியலில் நடப்பதை கண்டு கொள்ளலாம்.

ஒரு பத்திரிகையில் இருந்து இன்னொரு பத்திரிகைக்கு ஆட்சேர்த்தவர்கள் இப்போது எத்துணை துன்பப்படுகிறார்களோ அதேநிலையை தென்னிலங்கை அரசியலிலும் அனுபவிக்கத்தான் போகிறது. எனினும் பேராசிரியர் பீரிஸ் போன்றவர்களும் நிலையில்லாமல் அங்குமிங்குமாக தாவித்திரிவது 'பேராசிரியர்' என்ற பெரும்பதத்திற்கு இழுக்கைத் தரவல்லது என்பதை மட்டும் இப்போதைக்கு கூறிக்கொள்ளலாம்.

எதுவாயினும் ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆளும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இணைந்து கொண்டமை ஜே.வி.பிக்கு விழுந்த மிகப்பெரும் அடி என்பதும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் மாபெரும் ராஜதந்திரம் என்பதும் ஏற்புடையதே.

சுருங்கக் கூறின் இரு பிரதான கட்சிகளைத் தவிர மூன்றாவது சிறிய கட்சியின் ஆதிக்கம் ஆட்சியில் மேல் எழுவதற்கு பெரும்பான்மைக் கட்சிகள் அனுமதிக்க மாட்டாது என்பதையும் உரிய நேரத்தில் அவை இணைந்துகொண்டு தமது பலத்தை நிரூபிக்கும் என்பதையும் துள்ளிக்குதித்த ஜே.வி.பியின் பிரசார செயலாளர் விமல் வீரவன்ச போன்றவர்கள் உணர்ந்தாக வேண்டும். இதற்கு மேலாக ஆளும் தரப்புடன் இணைந்துகொண்ட ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இன விவகாரத்தில் எவ்விதம் நடந்துகொள்ளப் போகின்றனர் என்பது அவதானிப்பிற்குரிய முக்கிய விடயமாகும்.

அதாவது பேராசிரியர் பீரிசின் அரசியல் காரணமா? அல்லது மிலிந்த மொறகொடவின் அமெரிக்க உதவியா? இனப்பிரச்சினை விடயத்தில் ஜனாதிபதிக்கு உதவப் போகிறது எல்லாமே புரியாத புதிராக இருந்தாலும் யுத்த நிறுத்த உடன்படிக்கையைச் செய்துகொண்ட ரணிலைத் தூக்கி எறிந்த கட்சியின் முக்கிய தலைகள் நிச்சயம் போருக்கே 'ஓ' போடும் என்பதை கூறித்தானாகவேண்டும்.

# கல்விச் சேவை நேர்முகப்பரீட்சைகளை யாழ்ப்பாணத்தில் நடாத்த உறுதியளிப்பு

(யாழ்ப்பாணம்)

கல்வி நிர்வாக சேவை, கல்வியியலாளர்கள் சேவை ஆகியவற்றிற்கான நேர்முகப் பரீட்சைகளை யாழ்ப்பாணத்தில் நடாத்த நடவடிக்கை எடுக்கப்படும் என கல்வி உயர் கல்வி அமைச்சர் சுசில் பிறேமஜெயந்த,இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்திடம் உறுதியளித்துள்ளார்.

கல்வி உயர் கல்வி அமைச்சர் சுசில் பிறேமஜெயந்தவை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் த.மகாசிவம் சங்கத்தின் பத்திரிகைச் செயலாளர் தி.கணேசராசா ஆகியோர் சந்தித்தனர்.

இலங்கைக் கல்வி நிர்வாக சேவை வகுப்பு III , இலங்கை கல்வியியலாளர் சேவை வகுப்பு III, பலாலி , கோப்பாய் ஆசிரியர் கலாசாலைகளின் அதிபர் ,உபஅதிபர் ஆகிய பதவிகளுக்கான நேர்முகப் பரீட்சைகளுக்கு பலர் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு அழைக்கப்பட்டுள்ளனர்.

தற்போது தரைப் போக்குவரத்து, கடற் போக்குவரத்து என்பன இடம்பெறவில்லை. அத்துடன் விமான சேவையிலும் இடமெடுப்பது சாத்தியமில்லையென்பதோடு பெரும் செலவும் ஏற்படுகின்றது. எனவே நூற்றுக்கணக்கானோரை கொழும்புக்கு அழைப்பதைத் தவிர்த்து நேர்முகப் பரீட்சை நடாத்தும் அதிகாரிகள் மூவரையும் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி நேர்முகப் பரீட்சையை யாழில் நடாத்தும்படி அமைச்சரை தமிழர் ஆசிரியர் சங்கம் கேட்டுக்கொண்டது.

சங்கத்தின் கோரிக்கை நியாயமானதென ஏற்றுக்கொண்ட அமைச்சர் மேலதிகச் செயலாளர் உடுவை தில்லை நடராசாவின் தலைமையில் நேர்முகப் பரீட்சைக் குழுவினரை யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி நேர்முகப் பரீட்சையை யாழ்ப்பாணத்தில் நடாத்த நடவடிக்கை எடுப்பதாக சங்க தூதுக்குழுவிற்கு உறுதியளிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அதிபர் சேவைகளுக்கான நேர்முகப் பரீட்சைகளையும் யாழ்ப்பாணத்திலேயே நடாத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் எனச் சங்கத்தூதுக்குழு விடுத்த வேண்டுகோளுக்குப் பதிலளித்த கல்வி அமைச்சர் அதிபர் சேவைக்கான நேர்முகப் பரீட்சைகள் மாகாணக் கல்வி அமைச்சிடம் தாம் பாரப்படுத்த உள்ளதாகவும் மாகாணக் கல்வி அமைச்சுச் செயலாளருடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுக்கும்படியும் சங்கத்தூதுக் குழுவிற்கு ஆலோசனை வழங் கி யுள்ளதாக பொதுச் செயலாளர் த.மகாசிவம் தெரிவித்தார். (ச)

# வாகரையிலிருந்து இடம் பெயர்ந்த மக்கள் தம்மை மீளக்குடியமர்த்துமாறு கோரிக்கை

(மட்டக்களப்பு)

யுத்தம் காரணமாக வாகரையிலிருந்து இடம் பெயர்ந்த மக்கள் தம்மை மீளக்குடியமர்த்துமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

யுத்த சூழ்நிலை காரணமாக நாங்கள் வாகரையை விட்டு இடம்பெயர்ந்து படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வந்தோம். தற்போது எமது பிரதேசத்தில் யுத்தம் ஓய்ந்து படையினரின் கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளது.

எனவே எங்களை உடனடியாக எமது சொந்த இடத்தில் குடியமர ஏற்பாடு செய்யுங்கள் இனியும் எங்களால் இங்கு வாழ முடியாது என வாகரையில் இருந்து இடம் பெயர்ந்து மட்டக்களப்பு மாவட்ட அகதிகள் முகாமில் தங்கியுள்ள தமிழ் மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இரு நாட்களாக பெய்து வரும் தொடர்ச்சியான மழையினால் வாகரையில் இருந்து இடம் பெயர்ந்து அகதி முகாம்களில் கூடாரங்களில் தங்கியிருப்போர் பல்வேறு கஷ்டங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இப் பிரதேசத்தில் கடந்த 24 மணி நேரத்தில் 36.2 மில்லி மீற்றர் மழை பதிவாகியுள்ளதாக வானிலை அவதான நிலையம் அறிவித்துள்ளது.

காற்றுடன் பெய்யும் மழைகாரணமாக அகதிகளின் பல கூடாரங்கள் சரிந்து விழுந்துள்ளதுடன் பல கூடாரங்களில் ஒழுக்கு ஏற்பட்டு மக்கள் இருக்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. மழை ஒழுக்குக் காரணமாக அகதிகள் கூடாரங்களை விட்டு வெளியேறி தற்காலிகமாக வேறு இடங்களில் தங்க வேண்டியேற்பட்டுள்ளது.

எனவே தங்களை உடனடியாக தமது சொந்த இடங்களில் மீளக்குடியேற்றுமாறு அகதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். இம் மாவட்டத்தில் 41 அகதி முகாம்களில் 61 ஆயிரம் பேர் இடம் பெயர்ந்த நிலையில் அகதிகளாக தங்கியுள்ளனர் என மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார். (ச)

# ஐ.தே.க. உறுப்பினர்களின் கட்சித்தாவல் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை பாதிக்காது

## ஊடகத்துறை அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களின் கட்சித்தாவலும் ,ஐக்கிய தேசியக் கட்சியுடன் செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தமும் வேறு வேறானவை என அரசின் ஊடகத்துறை அமைச்சர் அநுர பிரியதர்சன யாப்பா தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சிக்கும் அரசிற்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் நாட்டின் தேசியப் பிரச்சினையை தீர்ப்பதற்கானது. ஆனால் ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசிற்கு ஆதரவளிப்பது முற்றிலும் வேறுபட்டது. ஐக்கிய தேசியக் கட்சி ஏன் இவை இரண்டையும் சேர்த்து குழுப்புகின்றார்கள் என தெரியவில்லை.

ஐக்கிய தேசியக் கட்சியினர் தமது கட்சியின் உள்ளக பிரச்சினைகளை தீர்ப்பதற்கு அரசு நிறைய கால அவகாசம் வழங்கியிருந்தது. ஆனால் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் எமக்கு ஆதரவளிக்க முன்வரும் போது நாம் என்ன செய்ய முடியும்?

மேலும் பல ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள்அரசுக்கு ஆதரவளிப்பார்களானால் அவர்களையும் உள்வாங்குவதற்கு அரசு ஆவலாக உள்ளது. மகிந்த ராஜபக்ஷ பதவியேற்றதில் இருந்து 40 எதிர்த்தரப்பு உறுப்பினர்கள் அரசில் இணைந்துள்ளனர்.

தற்போது அரசில் இணைந்த 18 ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள்,6 முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் போன்றோரின் ஆதரவுடன் 113 பெரும்பான்மையை அரசு பெற்றுள்ளது. மேலும் ஹெல உறுமய மற்றும் ஜே.வி.பி போன்றவற்றின் உதவியுடன் அரசின் பலம் 159 ஆக அதிகரிக்கலாம்.

மகிந்த சிந்தனையை நடைமுறைப்படுத்த உறுதியான ஒரு அரசு நாடாளுமன்றத்தில் தேவை. அதற்கு இருவழிகள் தான் இருந்தன. ஒன்று பொதுத்தேர்தல் நடத்துவது அல்லது எதிர்த்தரப்பு உறுப்பினர்களை உள்வாங்குவது.

பொதுத்தேர்தலை நடத்துவதனால் 2 பில்லியன் ரூபாய்கள் செலவாகும். ஆனால் கட்சித் தாவல் மூலம் அமைச்சர்களுக்கு வழங்கப்படும் ஊதியமே செலவாகும். ஒவ்வொரு அமைச்சருக்கும் ஒவ்வொரு செயலாளர்களே நியமிக்கப்படுவார்கள் என்றார் அவர். (ச)

# இரவு நேரத்தில் நடமாடிய மேலும் ஐந்து பேர் கைது

(யாழ்ப்பாணம்)

ஊடரங்கு வேளையில் யாழ்.நகரை அண்மித்த பகுதிகளில் நடமாடிய 5 பேரை இராணுவத்தினர் கைது செய்து யாழ்.பொலிஸில் ஒப்படைத்துள்ளனர்.

நேற்றுமுன்தினமிரவு கைது செய்யப்பட்ட ஐவரையும் யாழ்.மாவட்ட நீதிமன்றில் பொலிஸார் ஆஜர்ப்படுத்தினர்.

கைது செய்யப்பட்டவர்கள் ஜஸ்டின் சில்வா அருள்ராஜ் (யாழ்ப்பாணம்),யோகராஜா இக்ஸ்மன் (தண்ணீர் தொட்டியடி ,யாழ்ப்பாணம்),ஜேக்கப் பத்திக்குமார் (குருநகர்), விபுலானந்தராஜா பசில் ரவீந்திராஜா (குருநகர்), சிறிதரன் சுமில்றன் (யாழ்ப்பாணம்) என்பவர்களேயாவர்.

இவர்களை விசாரணைகளுக்காக எதிர்வரும் 9ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு யாழ்.மாவட்ட நீதிமன்ற நீதிவான் இ.த.விக்னராஜா பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (ச–5)

# விமான டிக்கட் பெற திரண்ட மக்கள் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

விமானப் பற்றுச்சீட்டினை பெறுவதற்கென பதிவுகளை மேற்கொள்வதற்காக நேற்றுக்காலை மக்கள் வெள்ளம் அலை மோதியது. வின்சர் தியேட்டர் சந்தியிலுள்ள குறிப்பிட்ட விமான பற்றுச்சீட்டு வழங்கும் காரியாலயத்திற்கு முன்னால் நேற்றுக்காலை சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் கூடினர்.

மக்கள் கூட்டத்தினை கட்டுப்படுத்த முடியாமல் நிறுவனப் பணிகள் பாதிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. இதேவேளை அப் பகுதிக்கு விரைந்த இராணுவத்தினரும் பொலிஸாரும் மக்கள் வெள்ளத்தைக் கட்டுப்படுத்தும் முயற்சிகளில் ஈடுபட்டனர். இதன்போது சிலர் தாக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.எனினும் நீண்ட நேரத்தின் பின் குறிப்பிட்ட சிலருக்கு மட்டும் பதிவு செய்வதற்கான இலக்கம் வழங்கப்பட்டதாக கூறப்பட்டது. (ச–3)

# நேர்முகப்பரீட்சையின் மூலம் டிப்ளோமாதாரிகளுக்கு நியமனம்

பல்கலைக்கழகம், உயர் தொழில் நுட்பக் கல்லூரிகள், தொழில் நுட்பக்கல்லூரிகள் மற்றும் பிற அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களில் டிப்ளோமாப் பட்டம் பெற்ற டிப்ளோமாதாரிகளுக்கு நேர்முகப்பரீட்சை மூலம் நியமனம் வழங்க கல்வி அமைச்சர் இணக்கம் தெரிவித்துள்ளார்.

தமிழர் ஆசிரியர் சங்கத்தின் வேண்டுகோளை ஏற்று வடக்கு,கிழக்கில் பாட ரீதியாக உள்ள வெற்றிடங்களை பரிசீலனைக்கு எடுத்து மாகாண கல்வி அமைச்சின் அறிக்கையையும் பெற்று ஆவனை செய்வதாகவும் அவர் உறுதியளித்தார்.

ஆங்கிலம், விவசாயம், உடற்கல்வி, நீர் உயிரியல், தொழில் நுட்பப்பாடங்கள், கவின் கலைப் பாடங்கள், கணனி, தகவல் தொழில் நுட்பம் போன்ற முறைகளில் டிப்ளோமாப் பட்டம் பெற்ற ஆயிரக்கணக்கானோர் உள்ளனர்.

வடக்கு கிழக்கில் 3 ஆயிரம் ஆசிரியர் வெற்றிடங்களும் வடக்கு கிழக்குத் தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் 6 ஆயிரம் ஆசிரியர் வெற்றிடங்களும் உள்ளன.

எனவே டிப்ளோமாதாரிகளை பட்டதாரிகளைத் தெரிவு செய்வதுபோல் நேர்முகப் பரீட்சை மூலம் ஆசிரியர் நியமனம் வழங்கி தமிழ்மொழி மூல மாணவர்களுக்கு கல்வியில் சம வாய்ப்பு வழங்க விரைவாக நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும் சங்கம் சுட்டிக் காட்டியபோதே அமைச்சர் மேற்படி உறுதிமொழியை வழங்கினார் என சங்கத்தின் பொதுச் செயலாளர் த.மகாசிவம் தெரிவித்தார். (ச)

# இலங்கை அகதிகள் 35பேர் தனுஷ்கோடிக்குச் சென்றனர்

இலங்கையிலிருந்து தனுஷ்கோடி அரிச்சல்முனை மற்றும் மண்டபம் வடக்கு கடற்கரை பகுதிக்கு சனிக்கிழமை இரவு மற்றும் ஞாயிற்றுக்கிழமை 35பேர் அகதிகளாக வந்துள்ளதாக சென்னைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளி லிருந்து 8 குடும்பங்களைச் சேர்ந்த 13 ஆண்கள் 8பெண்கள் 7 ஆண் குழந்தைகள்,7 பெண்குழந்தைகள் ஆகிய 35 பேர் மன்னார் கடற்கரையில் இருந்து ஒருபைபர்கிளாஸ் படகில் புறப்பட்டு தனுஷ்கோடி அரிச்சல்முனை மற்றும் மண்ட பம் வடக்கு கடற்கரை பகுதிக்கு சென்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இந்திய கடற்படையினர் விசாரணைக்கு பின் தனுஷ் கோடி மற்றும் மண்டபம் பொலிஸ் நிலையம் வந்த இவர் களிடம் பொலிஸார் தீவிர விசாரணை நடத்தினர். இதனையடுத்து இவர்களை மண்டபம் அகதிகள் முகாமிற்கு அனுப்பிவைக்கப்பட்டனர். (ச-5)

# கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடைய இருவர் கைது

## 6 இலட்சம் பெறுமதியான நகை,பணம் மீட்பு

திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய இருவர் நேற்றுமுன்தினமிரவு மானிப்பாயில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடமிருந்து 6 இலட்சம் பெறுமதியான பணம் மற்றும் நகைகள் மீட்கப்பட்டுள்ளன. இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட இருவரும் பின்னர் மானிப்பாய் பொலிஸிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இவர்கள் இருவரும் கடந்த 24 ஆம் திகதி கொக்குவில் மேற்கு சுப்பையா வீதியிலுள்ள வீடொன்றிலிருந்து திருடிய 6 இலட்சம் பெறுமதியான பணம் மற்றும் நகைகளை பொலிஸிடம் ஒப்படைத்துள்ளனர்.

இருவரையும் நேற்று யாழ்.மாவட்ட நீதிமன்றில் பொலிஸார் ஆஜர் செய்தபோது அவர்களை 48 மணிநேரம் மேலதிக விசாரணைக்காக தடுத்து வைக்குமாறு யாழ்.மாவட்ட நீதிவான் உத்தரவிட்டார்.

அத்துடன் திருட்டுப் போனதாக முறையிட்டவர்களை நாளை நீதிமன்றத்திற்கு சமுகமளிக்குமாறும் பணித்தது டன் மீட்கப்பட்ட பணம் மற்றும் நகைகளை நீதிமன்றில் ஒப்படைக்குமாறும் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (ச-5)

# நிரந்தர...

என்பதில் எனக்கு நம்பிக் கையிருக்கிறது.

எனவே மகிந்த சிந்தனை –பத்து வருட தொலை நோக்கை அடிப்படையாகக் கொண்டு புதிய இலங்கையை கட்டியெழுப்புவதற்கும் மிலேனிய அபிவிருத்திக் குறிக்கோளை அடைந்து கொள்வதற்குமான எமது நேர்மையான அர்ப்பணிப்பிற்கு எமது அபிவிருத்திப் பங்காளர்களின் முழுமையான ஒத்துழைப்பை நான் வேண்டி நிற்கின்றேன்.

எமது நாடு பயங்கரவாதத்தினால் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. பயங்கரவாதத்தின் அழிவுதரும் அச்சம் நிறைந்த தோற்றம் குறித்து முழு உலகமுமே அறிந்து வைத்திருப்பது எமக்கு தைரியத்தை அளிக்கிறது.

1980 களில் இவ்வாறானதொரு பின்னணியை சர்வதேச சமூகம் கொண்டிருக்கவில்லை. ஒரு நாடு என்ற வகையில் பயங்கரவாதத்திற்கு முகம் கொடுப்பதற்கு சர்வதேச சமூகத்துடன் இணைந்து செயற்பட வேண்டியிருக்கிறது.

பயங்கரவாதத்திற்கு காரணமாக அமைந்த அடிப்படைக் காரணிகளுக்கு அரசியல் ரீதியான பேச்சுவார்த்தைகளின் மூலம் யாப்பு ரீதியான தீர்வுகளைக் காணுதல் வேண்டும். அதேபோல் பொதுமக்களுக்கும் பொதுச் சொத்துக்களுக்கும் செய்யப்படுகின்ற பயங்கரவாத அச்சுறுத்தல்களுக்கு எதிராக ஒன்றிணைந்து செயற்படுவது முக்கியமானதாக அமைகிறது என ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். (ச)

# அதிபர் பதவிக்கு விண்ணப்பம்

வலிகாமம் வலயத்திற்குட்பட்ட யா/காட்டுப் புலம் அ.த.க.பாடசாலை,யா/ஈவினை அ.த.க.பாடசாலை ஆகிய பாடசாலைகளில் அதிபர் பதவிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது. இலங்கை அதிபர் சேவை வகுப்பு 2.II வகுப்பு III ஐச் சேர்ந்தவர்களிடம் இருந்தும் இலங்கை ஆசிரிய சேவை வகுப்பு I வகுப்பு 2.I வகுப்பு 2.II ஐச் சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

மாதிரிப் படிவத்தை வலயக்கல்வி அலுவலகத்தில் பார்வையிட்டு விண்ணப்பிக்க விரும்புவர்கள் எதிர்வரும் 12ஆம் திகதிக்கு முன் உரிய முறைப்படி வலயக்கல்வி அலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு வலிகாமம் வலயக்கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார். (ச)

# பாடசாலை மாணவர்கள் நேற்று வகுப்புப் பகிஷ்கரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டிலுள்ள பெரும்பான்மை பாடசாலைகளின் கல்வி நடவடிக்கைகள் நேற்று பாதிப்படைந்தன.

வடமராட்சி ஹாட்லிக்கல்லூரி மற்றும் வேலாயுதம் மகாவித்தியாலய பாடசாலைகளில் இருந்து கடத்தப்பட்ட மாணவர்களை விடுவிக்கக் கோரி கடந்த சில நாட்களாக வடமராட்சியில் மட்டுப்படுத்தப்பட்ட வகையில் வகுப்புக்களை பகிஷ்கரித்த மாணவர்கள் நேற்று குடாநாடு தழுவிய போராட்டத்தை நடத்தினர்.

இந்த பகிஷ்கரிப்புப் போராட்டத்தினால் நகரப் புறங்களில் உள்ள பாடசாலைகளின் கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்பட்ட போதிலும் கிராமப்புறங்களில் கணிசமான அளவு மாணவர்கள் வரவு காணப்பட்டதாக பாடசாலை அதிபர்கள் தெரிவித்துள்ளனர். (ச-3)

# தெல்லிப்பழை...

யத்தில் சரணடைந்த நிலையில் நீதிமன்ற காவலில் யாழ்.சிறைச்சாலையில் வைக்கப் பட்டுள்ளார்.

இதனையடுத்து இவ்வாறு சரணடைவர்களை தெல்லிப்பழை புனர்வாழ்வு முகாமில் தங்க வைத்து அவர்களைப் பாதுகாப்பதுடன் நல்வாழ்வுக்கு உட்படுத்தவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதுகுறித்து பிரதம நீதியரசர், நீதி அமைச்சின் செயலாளர் மற்றும் புனர்வாழ்வு பாதுகாப்பு அமைச்சு மையத்தின் ஆணையாளர் ஆகியோருடன் பேச்சுவார்த்தை நடாத்தியதுடன் சிவில் நிர்வாக அதிகாரியின் கீழ் இதனை செயற்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு பணித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (ச-3)

# வவுனியாவில் தாக்குதல்

வவுனியாவில் நேற்றுக்காலை 9.50 மணியளவில் இடம்பெற்ற கைக்குண்டுத் தாக்குதலில் இரு பொலிஸாரும் இரு பொது மக்களும் காயமடைந்துள்ளனர்.

சம்பவத்தில் காயமடைந்ததோர் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர். இரு பொலிஸாரையும் மேலதிக சிகிச்சைக்காக அனுராதபுரம் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்கள். (ச-9)

# காங்கேசன்துறை...

காத்துக் கிடப்பதாகவும் இதனால் உடனடியாக மக்களுக்கு பொருட்களை விநியோகிக்க முடியாத நிலை காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பருத்தித்துறை துறைமுகத்தில் பொருட்கள் இறக்கும்பணி நிறுத்தப்பட்டதாலேயே இத் தாமதம் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது. இதேவேளை மாஸ் றுகுணு கப்பல் கொழும்பிலிருந்து பொருட்களுடன் நேற்று யாழ்.நோக்கிப் புறப்பட்டதாகத் தெரிவிக்கப் பட்டது. (ச)


# மரண அறிவித்தல்

## நவாலியூர் செல்வராஜா செல்வராணி (மம்மி)

(HSCMF-SECRETARY)

புலவர் வீதி, நவாலி வடக்கை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்வராஜா செல்வராணி 29.01.2007 நேற்று திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு கந்தையா-அழகரத்தினம் தம்பதியினரின் மகளும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை செல்வராஜா (கிராம அலுவலர் -நவாலி VSW) வின் மனைவியும், காலஞ்சென்ற ஹேமலதா (கிராம அலுவலர்-நவாலி- HSCMF), ரமேஷ் - (உள்ளூராட்சி உதவியாளர் LGA பிரதேச சபை வேலணை, மத்தியஸ்தர்), சுரேஷ் (ஆசிரியர் சாவகச்சேரி இந்துக்கல்லூரி), சதீஸ் (சமுர்த்தி அலுவலர்-பிரதேச செயலகம் சண்டிலிப்பாய்) ஆகியோரின் அன்புத் தாயாரும்,சுதா (ஆசிரியை மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை) , மகாதேவி ( DPDHS JAFFNA) ஆகியோரின் மாமியும், அஸ்வினி (HUMEDICA- INTER SCHOOL),ஓசாயினி (HUMEDICA-INTER SCHOOL), ஆகியோரின் பேர்த்தியும், செல்வராசா (முருகன் ஸ்ரோஸ்) , இந்திராணி (ஜேர்மன்), சந்திரகாந்தி, ஜெயராணி ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று செவ்வாய்க்கிழமை பி.ப. 2 மணிக்கு 'ஹேமா' இல்லத்தில் இடம் பெற்று பூதவுடல் நவாலி ஆரியம்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்க.

தகவல்;
எஸ்.ரமேஸ் -LGA
எஸ்.சுரேஷ் (ஆசிரியர்)
எஸ்.சதீஸ்–SDO (மகன்மார்)

புலவர் வீதி,
நவாலி வடக்கு.

(C-605)


# இலங்கையில் சமாதானத்தை...

புதிய இலங்கையைக் கட்டியெழும்புவோம் என்ற கருப்பொருளினை அடிப்படையாகக் கொண்ட இலங்கைக்கான அபிவிருத்திச் சபை மாநாட்டினை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று தொடக்கி வைத்தார்.

இரண்டு நாள் நடைபெறும் இம் மாநாட்டில் கலந்துகொண்டுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் ஐம்பதிற்கும் மேற்பட்ட கொடையாளி நாடுகளினதும் அமைப்புக்களினதும் 350க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் அரசின் 2006 ஆம் ஆண்டு தொடக்கம் 2016 ஆண்டுவரையிலான பத்தாண்டு அபிவிருத்தித் திட்டங்களை விரிவாக ஆராய்கின்றனர்.

இன்றைய ஆரம்ப வைபவத்தில் உரையாற்றிய இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் றொறொபேட் பிளேக் இலங்கையின் பயங்கர வாதத்திற்கு எதிரான நடவடிக்கைக்கு அமெரிக்கா எப்போதும் ஆதரவு வழங்கும் என்றும் இலங்கைப் படைகளை வலுப்படுத்த இராணுவப் பயிற்சிகளையும் இதர ஒத்துழைப்புக்களையும் அமெரிக்கா தொடர்ந்து வழங்கும் எனவும் தெரிவித்துள்ளார்.

இனப்பிரச்சினைக்கு சமாதானத்தீர்வு காண அரசும் விடுதலைப்புலிகளும் போர் நடவடிக்கையில் விடுபட்டு அமைதிப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்கவேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

இந்த பயங்கரமான இனப்பிரச்சினைக்கு இராணுவ ரீதியாக தீர்வுகாண முடியாது என்ற அமெரிக்காவின் அசையாத நம்பிக்கையில் எவ்வித மாற்றமும் கிடையாது.

ஜனாதிபதியவர்கள் பாராளுமன்ற பலத்தை அதிகரிக்க எடுத்த முயற்சிகளை வரவேற்பதுடன் இவற்றினூடாக செம்மையான அதிகாரப் பகிர்வு யோசனைகளைத் தயாரித்து அதை விடுதலைப்புலிகளுடன் நிலையான பயன்தரக்கூடிய பேச்சுக்களுக்கான தீர்வு யோசனையின் அடிப்படையாக முன்வைக்க வேண்டும் என எதிர்பார்ப்பதாகவும் இந்த இனப்பிரச்சினையானது பொருளாதாரத்திற்கும் மக்களுக்கும் பாரிய அளவில் இழப்புக்களை ஏற்படுத்தியுள்ளது எனவும் அவர் மேலும் கூறினார்.

அபிவிருத்தித் திட்டங்களுக்காக பயன்படுத்தக்கூடிய பாரிய நிதி இராணுவச் செலவுக்காகவும் இடம் பெயரும் மக்கள் மீதும் செலவிடப்படுகிறது என அவர் தெரிவித்தார்.

மறு புறத்தில் வருமானம் இன்மையினால் உல்லாசப் பயணத்துறையில் வீழ்ச்சி, வெளிநாட்டு முதலீடுகளில் வீழ்ச்சி போன்ற பாரதூரமான விளைவுகளையும் இம் மோதல்கள் ஏற்படுத்தியிருக்கின்றன.

ஆகவே நீடித்து நிலைக்கக்கூடிய பொருளாதார வளர்ச்சியை அடைய வேண்டுமாயின் நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவது இன்றியமையாதது என அவர் மேலும் தெரிவித்தார். (ச-3,9)

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ.ஸ்தாபனத்தாரால் இல.03, இரண்டாம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.01.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.